# வாக்குத்தத்தம்



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 22; எபி 11:17; லேவி 18:21; யோவான் 1:1–3; ரோமர் 5:6–8; ஆதி 23–25; ரோமர் 4:1–12.

**மனன வசனம்:** ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார். ஆதி 24:1.

இறுதியாக, தேவன் வாக்குரைத்திருந்தபடி, ஆபிரகாம் 'முதிர்வயதாயிருக்கையில்', சாராள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு ஈசாக்கு என்று ஆபிரகாம் பெயரிட்டான். ஆதி 21:1-5. அதோடு ஆபிரகாமின் சம்பவம் முடியவில்லை; அந்த ஈசாக்கைப் பலியிட மோரியா மலைமேல் கொண்டு சென்றதுதான் உச்சக்கட்டமே. ஆனால் ஈசாக்கைப் பலியிடும்போது தேவன் தடுத்து, ஒரு ஆட்டுக்கடாவைப் பலியிடச் சொன்னார். ஆதி 22:13. ஆபிரகாமின் 'சந்ததி'மூலம், தேசங்களை ஆசீர்வதிப்பதில் தேவன் தீர்மானமாக இருந்தார். ஆதி 22:17,18. அந்தச் சந்ததி இயேசுவே. அப் 13:23. ஆச்சரியமான, சற்று அசௌகரியமான இந்தச் சம்பவத்தில், இரட்சிப்பின் திட்டம் அதிகமாக வெளிப்படுகிறது.

ஆழமான ஆவிக்குரிய பாடங்கள் இருந்திருக்கலாம்; ஆனால் ஆபிரகாமின் குடும்பத்தார் அதிர்ச்சியடைந்திருப்பார்கள்; எதிர்காலம் என்னவாகுமோவென ஆபிரகாம் குழம்பியிருப்பான். மோரியா மலைமேல் பலியிட்டு வந்தபின், சாராள் மரிக்கிறாள்; ஈசாக்கு தனியாக இருக்கிறான். ஆதி 23.

எதிர்காலம் 'சரியாக' அமைவதற்கான முயற்சிகளில் ஆபிரகாம் இறங்குகிறான். தன் மகனுக்கு ரெபேக்காளை மணமுடிக்க ஆயத்தம் செய்கிறான். ஆதி 24. அவளுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். ஆதி 25:21-23. ஆபிரகாமும் கேத்தூராள் எனும் பெண்ணை விவாகம்பண்ணியிருந்தான்; அவளுக்கு பல பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஆதி 25:1-6. ஆபிரகாம் இறக்கும் மட்டுமுள்ள சம்பவத்தை இந்த வாரம் பார்ப்போம். ஆதி 25:7-11.

*2021, மே 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# மோரியா மலை

**எதற்காக அவ்வாறு சோதித்தார்? ஆதி 22:1–12; எபி 11:17. அந்த ஆச்சரியமான சம்பவத்திலுள்ள ஆவிக்குரிய பாடங்கள் என்ன?**

ஆதி 22 முதல் தர உலக இலக்கியமாக மாறியிருக்கிறது; இறையியல் வல்லுனர்கள் மட்டுமல்ல, தத்துவஞானிகளும் கலைஞர்களும் அதால் ஊக்கமடைந்திருக்கிறார்கள். தேவன் எதற்காக அவ்வாறு சோதித்தாரெனப் புரிந்துகொள்வது கடினம். பலியிடச் சொன்ன அதே தேவன்தாம் பிற்பாடு மனிதப் பலிகள் கூடாதென்று சொன்னவர். லேவி 18:21. மேலும் ஈசாக்குமூலம் நித்திய உடன்படிக்கை நிறைவேறும் என்று சொன்னவர்; ஆனாலும் பலியிடச் சொன்னார். ஆதி 15:5.

**அப்படியானால், தேவன் அவ்வாறு சொன்னதின் நோக்கம் என்ன? அவ்வளவு தீவிரமாக அவனை ஏன் சோதிக்கவேண்டும்?**

'சோதனை' என்பதற்கான எபிரெய வார்த்தை நிஷ்ஷா. இரண்டு எதிர்கருத்துகளைக் குறிக்கும்வகையில் வேதாகமம் அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறது. ஒன்று நியாயத்தீர்ப்பது; சோதனையைக் கொடுத்து, ஒருவர் உள்ளத்தில் இருப்பதை வெளிகொணர்வது. உபா 8:2; ஒப்பிடவும் ஆதி 22:12. இரண்டாவது சோதித்து, அவர் உள்ளத்தில் கிருபையின் நிச்சயத்தைக் கொடுப்பது. யாத் 20:18-20.

இங்கு, தேவன் மேலான விசுவாசத்தால் தன் 'எதிர்காலத்தை' கூட, அதாவது தன் வம்சத்தைக்கூட இழக்க ஆபிரகாம் ஆயத்தமானான். அவன் தேவனை நம்பினதால், அவர் சொன்னதைப் புரிந்துகொள்ள முடியாத நிலையிலும், அவ்வாறு செய்ய ஆயத்தமானான். காணாத ஒன்றை அல்லது முற்றிலும் புரிந்துகொள்ளாத ஒன்றை நம்புவதுதானே விசுவாசம்?

வேதாகம விசுவாசம் என்பது, தேவனுக்கு நம்மால் எவ்வளவு கொடுக்க முடியும், அவருக்கு எவ்வளவு தியாகம்செய்யமுடியும் என்பதை பற்றியதல்ல. அதுவும் அதில் ஒரு பகுதிதான். ரோமர் 12:1. மாறாக, நாம் தகுதியற்றவர்கள் என்பதைப் புரிந்திருந்து, அவரை எவ்வளவு தூரம் நம்புகிறோம், அவர் கிருபையை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்கிறோம் என்பதைப் பற்றியது.

இந்த உண்மையை தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. அதாவது ஆபிரகாம் எவ்வளவோ கிரியைகள் செய்தான்; தேவனுக்குக் கீழ்ப்படியவும், தன் மகனையே பலியிடவும் ஆயத்தமாக இருந்தான்; அவை நமக்குப் படிப்பினைகள்; ஆனாலும் அவை எதுவும் அவனை இரட்சிக்கமுடியவில்லை. ஏன்? தேவன்தாமே பலிக்கான ஆட்டுக்கடாவைக் கொடுத்தார்; அது, இயேசு மட்டுமே இரட்சிக்கக்கூடியவர் என்பதைக் காட்டியது.

அப்போதுதான் கிருபைபற்றி ஆபிரகாம் புரிந்திருப்பான். தேவனுக்காக நாம் செய்கிற கிரியைகள் நம்மை இரட்சிப்பதில்லை; தேவன் நமக்குச் செய்கிற கிரியைகளே இரட்சிக்கின்றன. எபே 3:8; ஒப்பிடவும் ரோமர் 11:33. ஆனாலும் ஆபிரகாமைப்போல ஆண்டவருக்காகப் பணிசெய்ய அவர் நம்மை அழைக்கிறார்; ஆபிரகாமின் சம்பவம் அதை நமக்கு வெளிப்படுத்துகிறது. யாக் 2:2-23.

**உங்கள் விசுவாசத்தையும் விசுவாசக்கிரியைகளையும் அளப்பதற்கு மோரியா மலை சம்பவம் எவ்வாறு உதவுகிறது?**

# தேவன் பார்த்துக்கொள்வார்

**தாம் பார்த்துக்கொள்வதாகக் கொடுத்த வாக்குறுதியை தேவன் எவ்வாறு நிறைவேற்றினார்? ஆதி 22:8,14,18. என்ன கொடுத்தார்?**

பலிமிருகம் எங்கேயென ஈசாக்குக் கேட்டபோது, 'தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்' என்று ஆபிரகாம் சொன்னான். ஆதி 22:8. ஆச்சரியமான பதில்! ஆனால் எபிரெய வினைச்சொல் அமைப்பின்படி 'தேவன் தம்மையே ஆட்டுக்குட்டியாகக் கொடுப்பார்' என்று உள்ளது. 'பார்த்துக்கொள்வார்' என்பதற்கான எபிரெய வார்த்தை யீ ரெ லோ; 'தம்மையே கொடுப்பார்' அல்லது 'அவரே பார்த்துக்கொள்வார்' என்று அர்த்தம்.

இரட்சிப்பின் திட்டத்தின் சாராம்சத்தை அது வலியுறுத்துகிறது. அதாவது, நம் பாவங்களுக்காக தேவன்தாமே பாடுபடயிருந்ததையும், தண்டனையை ஏற்றுக்கொண்டதையும் காட்டுகிறது.

**மோரியா மலை பலி சிலுவையைச் சுட்டிக்காட்டியது; சிலுவையில் நடந்ததைப் புரிந்துகொள்ள யோவான் 1:1–3; ரோமர் 5:6–8 வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?**

சிலுவை நிகழ்வுக்கு வெகுகாலத்திற்குமுன் நிகழ்ந்த மோரியா மலை சம்பவத்தில், 'கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஆட்டுக்கடாவானது' இயேசுவைச் சுட்டிக்காட்டியது. ஆதி 22:13. அந்த மலையில்தான் கர்த்தர் 'காணப்பட்டார்'. அதை ஆபிரகாமும்கூட 'கர்த்தரைக் கண்ட பர்வதத்தில்' என்று சொன்னான். ஆதி 22:14; ஆசிரியர் மொழிபெயர்ப்பு. இவ்வாறு ஆபிரகாம் தீர்க்கதரிசனமாகச் சொன்னதை, இயேசுதாமே பிறகு குறிப்பிட்டிருக்கிறார்: 'உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்'. யோவான் 8:56.

'சுவிசேஷத்தின் எதார்த்தத்தை ஆபிரகாமின் உள்ளத்தில் பதியச்செய்யவும், அவனுடைய விசுவாசத்தைச் சோதிக்கவும், அவனுடைய குமாரனைப் பலியிடும்படி தேவன் கட்டளையிட்டார். மனிதனின் மீட்பிற்காக நித்திய தேவன் ஏறெடுத்த பலியின் மேன்மையை அவன் உணர்ந்துகொள்வதற்காக அந்தக் கொடிய சோதனையின் வியாகுலத்தை அவனுக்கு அனுமதித்தார்'.[1]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 154.

**சிலுவையில் நிகழ்ந்ததையும், நமக்காக இயேசு சகித்தவற்றையும் புரிந்துகொள்ள மோரியா மலை அனுபவம் எவ்வாறு உதவுகிறது? இயேசு நமக்காக மேலான பலியை ஏறெடுத்திருக்க, நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?**

# சாராளின் மரணம்

ரெபெக்காளை ஈசாக்கு திருமணம் பண்ணவிருந்தான்; எனவே ரெபேக்காளின் பிறப்புபற்றி முன்னரே வேதாகமம் சொல்கிறது. ஆதி 22:23; ஆதி 24. அதுபோல, ஆபிரகாம் கேத்துராளைத் திருமணம் செய்யவிருந்தான்; அதற்கான காரணத்தைச் சுட்டிக்காட்ட, சாராளின் மரணம் மற்றும் அடக்கம்பற்றி முன்னரே சொல்லுகிறது. ஆதி 23; ஆதி 25:1-4.

**ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதி நிறைவேறுவதில் சாராளின் மரணமும் அடக்கமும் என்ன பங்காற்றுகிறது? ஆதி 23.**

---

ஈசாக்கைப் பலியிடக் கொண்டுசென்ற சம்பவத்தைத் தொடர்ந்து, சாராளின் மரணம்பற்றிச் சொல்கிறது; எனவே, தன் மகன் சாகவிருந்த செய்திகேட்டு, அவள் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆபிரகாமின் பயணங்களிலும், விசுவாசக் குறைச்சல்களிலும் ஆபிரகாமோடு இருந்ததால், அந்தச் 'சோதனையிலும்'கூட, ஏதோ விதத்தில் அவள் சம்பந்தப்பட்டிருந்தாள். ஆதி 12:11-13.

அந்தச் சம்பவம் நடந்து முடிந்தபிறகு, சாராளுக்கு எப்படி செய்தி தெரிந்ததோ தெரியவில்லை; எப்படியோ தெரிந்திருக்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களிலும், இடையூறு நேருகிற சமயங்களிலும் அமைதியாக இருக்கிற ஒரு பெண்ணல்ல சாராள். ஒப்பிடவும் ஆதி 16:3-5; 18:15; 21:9,10. அந்தப் பரபரப்பான அனுபவத்திற்குபிறகு, அவளைப்பற்றி ஏதும் சொல்லப்படவில்லை; மரித்தும் போகிறாள்; எனவே அந்தச் சம்பவம் அவளைப் பாதித்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. ஆபிரகாமின் முதிர்வயதுபோல, சாராளின் வயதும் குறிப்பிடப்படுவது அச்சம்பவத்தில் அவளுக்கிருக்கிற முக்கியத்துவம் புரிகிறது. ஆதி 24:1; 23:1.

வேதாகமத்தில் வருடக்கணக்கின்படி ஒரு பெண்ணின் வயது சொல்லபடுகிறதென்றால், அது சாராள் மட்டுமே. அந்தச் சம்பவத்தில் அவளுக்குப் பங்கிருந்ததால்தான் அவளை முக்கியப்படுத்திப் பேசுகிறது. அவளுடைய மரணத்தைவிட, கல்லறை நிலம் வாங்குவது பற்றியே அந்த அதிகாரம் அதிகமாகப் பேசுகிறது; அந்த நிலம் வாக்குத்தத்த தேசம் சம்பந்தப்பட்டது என்பதே அதற்கு காரணம்.

'கானான்தேசத்தில் சாராள் மரித்தாள்' என்பதும், வாக்குத்தத்த தேசத்தில் சாராள் மரித்ததை வலியுறுத்துகிறது. ஆதி 23:2. ஆபிரகாமின் குடும்பத்தாரில் வாக்குத்தத்த தேசத்தில் மரித்து, அடக்கம்பண்ணப்பட்ட முதல் நபர் சாராள்தான். ஆபிரகாம் தன்னை 'அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்' ஆதி 23:4. என்று சொன்னதும், அதைத் தொடர்ந்து ஏத்தின் புத்திரரோடு அவன் பேசிய வார்த்தைகளும், அடக்கம்பண்ணுவதற்கான நிலத்தை வாங்குவது மட்டும் அவன் நோக்கமல்ல, அந்தத் தேசத்தில் நிரந்தரமாகக் குடியேறுவதும் அவன் நோக்கம் என்பதையும் காட்டுகிறது. ஆதி 23:4.

---

**ஆபிரகாம் எப்படிப்பட்ட நன்மதிப்பைப் பெற்றிருந்தான்? ஆதி 23:6. தேவன் அவனைப் பயன்படுத்தின விதத்தைப் புரிந்துகொள்ள அது எவ்வாறு உதவுகிறது?**

# ஈசாக்கிற்கு மனைவி

**சாராளின் மரணத்தைத் தொடர்ந்து ஈசாக்கின் திருமணச் சம்பவம் பற்றி ஆதி 24 கூறுகிறது. இரண்டு சம்பவங்களுக்கும் தொடர்புள்ளது. தன் குமாரன் கானானியரில் ஒரு பெண்ணை திருமணம் செய்யக்கூடாது என்று ஆபிரகாம் உறுதியாக இருந்தது ஏன்? ஆதி 24.**

வாக்குத்தத்த தேசத்தை தன் சந்ததியாருக்குக் கொடுப்பதாக தேவன் வாக்குப் பண்ணியிருந்ததால், தன் மனைவியை அடக்கம்பண்ணுவதற்கு அந்த நிலத்தை வாங்க ஆபிரகாம் விரும்பினான்; தன் மகன் ஈசாக்கு வாக்குத்தத்த தேசத்திற்கு வெளியே சென்று குடியேறவும் விரும்பவில்லை. ஆதி 24:7. மேலும், ஈசாக்கு தன் மனைவியை தன் அம்மா சாராளின் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றான்; 'ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதலடைய' ரெபேக்காள் ஒரு கருவியாக இருந்தாள்; எனவே தன் அம்மாவின் மரணத்திற்காக ஈசாக்கு வருந்தினான் என்பது புரிகிறது. ஆதி 24:67.

அந்தச் சம்பவம் முழுவதும் ஜெபங்கள், ஜெபநிறைவேறுதல்கள் குறித்த விபரங்கள் நிறைந்துள்ளன. மேலும், தேவனுடைய வழிநடத்துதல், மனிதர்களின் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் குறித்த சம்பவங்களும் உள்ளன. முதலில் ஆபிரகாம் செய்த ஓர் ஆணையுடன் அந்தச் சம்பவம் தொடங்குகிறது. 'வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில்' ஆணையிட்டான். ஆதி 24:3. ஆபிரகாம் முதற்கண் தேவனை சிருஷ்டிகராக அங்கீகரிக்கிறான். ஆதி 1:1; 14:19. அவர் தாம் ஆபிரகாமின் சந்ததியாரும் மேசியாவும் இப்பூமியில் பிறக்கக் காரணர்.

'தேவனாகிய கர்த்தர்', 'தம்முடைய தூதன்' எனும் வார்த்தைகள், கர்த்தருடைய தூதனானவரைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆதி 24:7. அவரே ஈசாக்குப் பலியாகாதபடி பாதுகாக்க பரலோகத்திலிருந்து வந்தார். ஆதி 22:11. பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்துகிறவரும், ஈசாக்கைப் பாதுகாத்தவருமாகிய கர்த்தருடைய தூதன், அந்தத் திருமணத்திற்கு வழிகாட்டயிருந்தார்.

தேவனுடைய அழைப்புக்கு அந்தப் பெண் இணங்காமல் இருக்கவும் வாய்ப்பிருந்தது. தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவராக இருந்தாலும், தமக்குக் கீழ்ப்படிய அவர் மனிதர்களைக் கட்டாயப்படுத்துவதில்லை. எலியேசர் அழைத்ததும் அவனோடு ரெபெக்காள் செல்லவேண்டும் என்பதே தேவதிட்டம்; ஆனாலும், தெரிந்தெடுக்கிற உரிமையும் அவளுக்கு இருந்தது. அவள் செல்ல விரும்பாதபட்சத்தில், அவளைக் கட்டாயப்படுத்த அவர் விரும்பவில்லை.

தேவன் நமக்கு தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுத்திருப்பதை இச்சம்பவமும் காட்டுகிறது. அந்த உரிமையை அவர் நம்மிடமிருந்து பறிப்பதே இல்லை. அதைப் பறித்தால், அது எப்படி உரிமையாகமுடியும்? மனிதர்களுக்கு அவர் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்திருந்தாலும், அதை வைத்து மனிதர்கள் மோசமான தீர்மானங்களைச் செய்தாலும், இறுதியில் தேவனுடைய அன்பும் தயவுமே நிலைத்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம்.

**எல்லாமே தேவசித்தப்படி நடப்பதில்லை என்றாலும், எல்லாம் அவர் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்பது எவ்வாறு ஆறுதலாக இருக்கிறது? உதாரணமாக தானியேல் 2 போன்ற தீர்க்கதரிசனங்கள் இந்தக் கருத்தை எவ்வாறு நிரூபிக்கின்றன?**

# ஆபிரகாமுக்கு ஒரு மனைவி

**ஆபிரகாமின் வாழ்க்கையின் இறுதிகட்ட நிகழ்வுகளை நாம் எவ்வாறு புரிந்து கொள்ளலாம்? ஆதி 27:67-25:8.**

சாராள் மரித்தபிறகு ஆபிரகாம் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தான். ஈசாக்கைப்போல, சாராளுக்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதலடைந் தான். ஆதி 24:67. அந்தக் கோத்திரப்பிதா தன் மகனைப்போல, தானும் சாராளின் மரணத்தை மறக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டிருக்கலாம்.

அந்தப் புதிய மனைவி யார் என்று தெளிவாகத் தெரியவில்லை. கேத்துரா ளின் குமாரர்களுடைய பெயர்கள் ஆகாரின் குமாரர்களுடைய பெயர்களைப் போலவே இருப்பதால், கேத்துராள் ஆகாராகத்தான் இருக்கவேண்டுமென சிலர் சொல்கிறார்கள். மேலும் ஆகாரின் குமாரனை நடத்தியதுபோலவே கேத்துரா ளின் குமாரர்களை ஆபிரகாம் நடத்தினான். அதாவது, அவர்கள் எவ்வித ஆவிக் குரிய செல்வாக்கும் ஏற்படுத்தாமல் இருக்கவும், தான் சாராளுக்குப் பெற்ற மகன் வேறு, பிற குமாரர்கள் வேறு என்று பிரித்துக்காட்டவும் அவர்களை தூர இடத் திற்கு அனுப்பிவிட்டான்.

அவன் 'தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுத்தான்'. ஆதி 25:5. ஆனால், 'மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ நன்கொடைகளைக் கொடுத் தான்'. ஆதி 25:6. 'மறுமனையாட்டிகள்' என்று சொல்லப்படுவதால், ஆகாரைப் போல கேத்தூராளும் மறுமனையாட்டி எனகிற நிலையில்தான் இருந்தாள்.

மேலும், ஆபிரகாம் கேத்துராளுக்குப் பெற்ற பிள்ளைகளின் பட்டியலும், இஸ்மவேலின் பிள்ளைகளுடைய பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதி 25:1-4,12-18. ஆபிரகாம் கேத்தூராளைத் திருமணம் செய்து அவளுக்கு ஆறு குமா ரர்கள் பிறந்த வம்ச வரலாறும், அவனுடைய இரண்டு குமாரர்களான இஸ்மவேல் மற்றும் ஈசாக்கின் வம்சவரலாறும் சொல்லப்படுவதற்கு காரணம், ஆபிரகாம் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவான் என்று தேவன் வாக்குரைத்தது நிறைவேறினதைக் காட்டுவதற்கே.

இரண்டாவது வம்சவரலாறில் இஸ்மவேலின் 12 கோத்திரங்கள்பற்றிச் சொல்லப்படுகிறது. ஒப்பிடவும் ஆபிரகாம் 17:20. யாக்கோபுமூலமாகவும் 12 கோத்திரங்கள் தோன்றவிருந்தன. ஆதி 35:22-26. ஆனால் தேவன் செய்த உடன் படிக்கை ஈசாக்கின் சந்ததிக்கு உரியது; இஸ்மவேல் சந்ததிக்கு உரியதல்ல. ஆதி 17:21. அதை வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

இரண்டு வம்சவரலாறுக்கு நடுவே ஆபிரகாமின் மரித்துபற்றி வேதாகமம் சொல்கிறது. ஆதி 25:7-11. அதுவும் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு சான்றாகும். 'நல்ல முதிர்வயதிலே', 'தீர்க்காயுசை' உடையவனாக மரிப்பான் என்று பல வரு டங்களுக்குமுன் தேவன் கொடுத்த வாக்குறுதி நிறைவேறியதைக் காட்டுகிறது. ஆதி 15:15; பிர 6:3.

முடிவில், உண்மையுள்ள தம் தாசனாகிய ஆபிரகாமுக்குக் கொடுத்த கிருபை யின் வாக்குறுதிகளை தேவன் நிறைவேற்றினார். அவன் விசுவாசத்தை மிகப்பெரிய முன்மாதிரியாக வேதாகமம் பேசுகிறது. விசுவாசத்தால் இரட்சிக்கப்படுவதற்கு பழைய ஏற்பாட்டில் மிகச்சிறந்த உதாரணமாக இருக்கிறது. ரோமர் 4:1-12.

# மேலும் படிக்க:

தேவன் தம் திட்டங்களைத் வெளிப்படுத்துமளவுக்கு ஆபிரகாம்சிறந்த தீர்க்கதரிசியாக இருந்ததால், ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் தலையிட்டு, அவன் குமாரனைப் பலியிடச் சொல்லி, தம் இரட்சிப்பின் திட்டத்தை சற்றே அவனுக்குத் தெரிவித்தார். ஆதி 18:17.

'உலகத்தின் பாவங்களுக்காகப் பலியிடப்பட்ட தேவகுமாரனுடைய முன்னடையாளமாக ஈசாக்கு இருந்தான். மனிதனின் இரட்சிப்புகுறித்த சுவிசேஷத்தை ஆபிரகாமுக்கு விளக்க தேவன் விரும்பினார். அதற்காகவும், அந்தச் சத்தியத்தின் எதார்த்தத்தை அவனுக்குப் புரியவைத்து, அவன் விசுவாசத்தைச் சோதிப்பதற்காகவும் ஆபிரகாமிடம் அவன் பிரிய குமாரனான ஈசாக்கைப் பலியிடச் சொன்னார். அந்த இக்கட்டான சமயங்களில் ஆபிரகாம் அனுபவித்த துக்கம், வேதனை எல்லாமே, விழுந்துபோன மனிதனுக்கான மீட்பின் திட்டத்தை அவன் மனதில் ஆழமாகப் புரியவைப்பதற்கே. மனிதன் முற்றிலும் அழியாமல் அவனைக் காப்பாற்றும்படி அழிவில்லா தேவன் தம் குமாரனையே மரிக்கக் கொடுக்க முன்வந்ததில், எத்துணை பெரிய சுயதியாகத்தைச் செய்தார் என்பதை அவனுடைய அனுபவத்தை வைத்தே புரியவைத்தார். மகனைப் பலியிடுமாறு தேவன் கட்டளையிட்டபோது, அதன்படி செய்ய ஆபிரகாம் எவ்வளவு மனவேதனை அடைந்திருப்பான் என்பதை சொல்லவே முடியாது'.

'ஆபிரகாமுக்கு வயதாகிவிட்டது; மரணநாள் நெருங்கிவிட்டது; ஆனாலும் தன் வம்சத்தாருக்கு தேவன் கொடுத்த வாக்குறுதி நிறைவேறுவதற்கு இன்னும் ஒரு விஷயத்தை அவன் செய்யவேண்டியிருந்தது. அவனுக்குப் பிறகு தேவனுடைய கட்டளைகளைப் பாதுகாக்கவும், தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்கு தகப்பனாகவும் ஈசாக்கையே தேவன் நியமித்திருந்தார்; ஆனால் அவனுக்கு இன்னும் திருமணமாகாமல் இருந்தது. கானானின் குடிகள் முற்றிலும் சிலைவழிபாட்டில் மூழ்கியிருந்தார்கள்; தம் ஜனங்கள் அவர்களோடு திருமண சம்பந்தம் செய்தால், அத்தகைய திருமணங்கள் தேவதுரோகத்திற்கு வழிநடத்தும் என்பதால் தேவன் அதற்கு தடை விதித்திருந்தார். சுற்றிலுமிருந்த சீர்கேடான செல்வாக்கு தன் மகனைக் கெடுத்து விடுமோ என்று அந்தக் கோத்திரப்பிதா பயந்தான் ... தன் மகனுக்கு பெண்பார்க்கும் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கத் தீர்மானித்தான்; தன் மகனை தேவனிடமிருந்து வழிவிலக்காத ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்க விரும்பினான் ... அப்பாவின் ஞானத்திலும் பாசத்திலும் நம்பிக்கை வைத்த ஈசாக்கு, அந்த விஷயத்தை அப்பாவின் கையிலே விட்டான்; அந்தத் தீர்மானத்தில் தேவன்தாமே வழிநடத்துவாரென நம்பினான்'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *ஈசாக்கைப் பலியிட ஆபிரகாம் தயாராக இருந்ததுபற்றி வகுப்பில் விவாதியுங்கள். அது எத்தகைய விசுவாசமாக இருந்திருக்க வேண்டும்? இந்தச் சம்பவம் எவ்வாறு மிகவும் பிரமிப்பாகவும், அதேவேளையில் அசௌகரியமாகவும் இருக்கிறது?*

2. *சுயாதீன சித்தம் என்றால் என்ன? சுயாதீனசித்தம் இல்லாவிட்டால் விசுவாசம் எவ்வாறு மெய்யானதாக இருக்கமுடியாது? சுயாதீனசித்தத்திற்கு சில வேதாகம உதாரணங்கள் யாவை? மக்கள் சில தவறான தேர்வுகளைச் செய்தபோதிலும், இறுதியில் தேவ சித்தம் எவ்வாறு நிறைவேறியது?*

# இரண்டு தெய்வீக முன்னேற்பாடுகள்

**தெடா பியனார்**

எந்தப் பயணமாக இருந்தாலும், தேவசித்தம் என்னவென தேவனிடம் ஜெபித்துக் கேட்காமல் நாம் பயணம் செய்வதே இல்லை. நான் அயர்லாந்தில் வசிக்கிறேன். என் குடும்பத்தார் தென் ஆப்ரிக்காவில் வசிக்கிறார்கள்; என் சகோதரி நமீபியாவில் வசிக்கிறார். வருடத்திற்கு ஒருமுறை அவர்களைச் சந்திப்பேன். விமானத்தில் இருக்கும்போது வேதாகமத்தையும், எலன் ஒய்ட் புத்தகங்களையும், ஓய்வுநாள்பள்ளிப் பாடங்களையும் வாசிப்பேன். கிறிஸ்துவிடம் செல்வதற்கான வழி எனும் புத்தகம் எப்போதும் என் பையில் இருக்கும். புத்தகம் வாசிப்பதால் நேரம் செல்வதே தெரியாது; மேலும் புதிய நபர்களின் அறிமுகங்கள் கிடைக்கும். நான் பயணம் செய்கிற ஒவ்வொரு முறையும் ஏதாவது சுவாரஸ்யம் நடப்பதுண்டு.

ஒருமுறை, அயர்லாந்தின் டப்ளினில் விமானத்திற்காகக் காத்திருந்தபோது, எனக்கு அருகிலிருந்த ஒருவரிடம் பேசினேன். அவர் அயர்லாந்து துப்பறியும் காவல் பிரிவில் வேலை பார்ப்பதாகவும், தென் ஆப்ரிக்காவில் உள்ள தன் குடும்பத்தாரைப் பார்க்க இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செல்வதாகவும் சொன்னார். பிறகு விமானத்தில் ஏறியபோது, ஒரு வாலிபப்பெண் எனக்கு அருகில் அமர்ந்தார். "நான் காலதாமதமாக விமான நிலையத்திற்கு வந்தேன். நல்லவேளையாக விமானத்தைப் பிடிக்கமுடிந்தது" என்றார்.

"இந்த விமானத்தில் நீங்கள் செல்லவேண்டும் என்பது தேவனுக்குத் தெரியும்" என்று கூறினேன். நாம் அனுமதிக்கும்போது தேவன் நம் வாழ்க்கையை எவ்வாறு கட்டுப்படுத்தி நடத்துகிறார் என்பதை அவருக்கு விளக்கினேன்.

ஆனால் விமானம் கிளம்புவதற்குமுன், விமானப் பணியாளர் அந்தப் பெண்ணிடம், தவறான இருக்கையில் அமர்ந்திருப்பதாகச் சொன்னார். அவர் எழுந்து சென்றார். காத்திருந்தபோது எனக்கு அறிமுகமான அயர்லாந்துக் காவலர் என் அருகில் உட்கார்ந்தார். "பார்த்தீர்களா, தேவன் எதையும் ஒரு காரணத் தோடுதான் செய்வார்" என்று கூறினேன்.

"நீங்கள் கடவுளை நம்புபவரா?" என்று அவர் கேட்டார்.

பிறகு என் ஆவிக்குரிய பின்னணிகுறித்து விசாரித்தார். "நான் ஒரு செவந்த்-டே அட்வென்டிஸ்ட்" என்று சொன்னேன். "பார்த்தீர்களா! என் மனைவியும் ஒரு செவந்த்-டே அட்வென்டிஸ்ட்தான். என்னை மாற்றுவதற்கு பல வருடங்களாக முயன்று கொண்டிருக்கிறாள்" என்று அவர் சொன்னார்.

நாங்கள் இரட்சிப்புகுறித்துப் பேசினோம். கிறிஸ்துவிடம் செல்வதற்கான வழி புத்தகம் ஒன்றை அவரிடம் கொடுத்தேன். "என் மனைவியும் பலமுறை இந்தப் புத்தகத்தை வாசிக்கச் சொல்லியிருக்கிறாள். இந்தமுறை நான் வாசிக்கப்போகிறேன்" என்று சொன்னார்.



இந்த இரண்டு சந்திப்புகளுமே குறிப்பிடத்தக்கவை. விமானத்தில் ஏறுவதற்குமுன் அந்தக் காவலரைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. பிறகு தவறான இருக்கையில் அமர்ந்த பெண்ணிடம் தேவனைப்பற்றிக் கூறினேன். மீண்டும் அந்தக் காவலர் என் அருகில் வந்த உட்கார்ந்து உரையாடினார். தேவனே எனக்கு அந்த இரண்டு வாய்ப்புகளையும் கொடுத்தார்; அவை தேவனுடைய முன்னேற்பாடுகள்.